தினத்தந்தி
4/10/2008

# தமிழ் விளம்பர படங்களுக்கு முதல் முறையாக விருது

## மெட்ராஸ் அட்வர்டைசிங் கிளப் வழங்கியது

சென்னை, அக்.4–

ஆங்கிலம், இந்தி விளம்பர படங்களுக்கு வழங்கப்படுவதை போன்று, தமிழ் விளம்பர படங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

### விளம்பர படங்கள்

விளம்பர துறையில், ஆங்கிலம் மற்றும் இந்தி மொழியில் எடுக்கப்படும் விளம்பர படங்களுக்கு மட்டும் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், தமிழ் உள்ளிட்ட பிற மொழிகளில் எடுக்கப்படும் விளம்பர படங்களுக்கு எந்தவிதமான விருதுகளும் வழங்கப்படுவதில்லை. இந்த குறையை போக்கும் வகையில் தமிழ் விளம்பர படங்களுக்கு 'மெட்ராஸ் அட்வர்டைசிங் கிளப்' சார்பில் 'தமிழ் 2008' என்ற பெயரில் விருதுகள் வழங்கப்பட்டது.

இந்த விருது தமிழ் கலாச்சாரம், தமிழ்ப்பண்பாடு, தமிழர்களின் வாழ்க்கை முறை, சினிமா, இசை ஆகியவற்றை மையமாக வைத்து எடுக்கப்பட்ட தமிழ் விளம்பர படங்களை கவுரவிக்கும் வகையில் வழங்கப்பட்டது. இந்த விருதுக்காக பத்திரிக்கை நிறுவனங்கள், திரைப்பட தயாரிப்பு நிறுவனங்கள், விளம்பர ஏஜென்சி என மொத்தம் 366 நிறுவனங்கள் 26 பிரிவுகளின் கீழ் போட்டியிட்டன.

### விருது வழங்கும் விழா

இந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா சென்னை சேத்துப்பட்டில் நடைபெற்றது. இதில், 'இந்து' பத்திரிக்கையின் நிர்வாக இயக்குனர் என். முரளி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார்.



போட்டியில் வெற்றி பெற்ற ஹலோ எப்.எம். நிறுவனத்திற்கு, பிரின்ஸ் ஜெம் அன்ட் ஜூவல்ஸ் தலைவர் பிரின்சன் ஜோஸ் விருதை வழங்கிய போது எடுத்தபடம்.

மேலும், தினத்தந்தி பொது மேலாளர் சந்திரன், யுனிவர்செல் நிர்வாக இயக்குனர் சதீஸ் பாபு, விகடன் குருப் நிர்வாக இயக்குனர் ஸ்ரீனிவாசன், சிபி அமைப்பின் தலைமை தகவல் தொடர்பு அதிகாரி டேவிட் அப்பாசாமி, திரைப்பட தயாரிப்பாளர் வசந்த், விஜய் டி.வி. பொது மேலாளர் ஸ்ரீராம், பிரின்ஸ் ஜெம் அன்ட் ஜூவல்ஸ் தலைவர் பிரின்சன் ஜோஸ், அனுரகா மெடிசின் சேர்மன் ராஜன், மெட்ராஸ் அட்வர்டைசிங் கிளப் தலைவர் ஆர். சேஷாத்திரி ஆகியோர் விருதுகளை வழங்கினார்கள்.

இதில், தங்கம், வெள்ளி, வெண்கலம் உள்பட 100–க்கும் மேற்பட்டோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. 'ஓகில்வி அன்ட் மதர்' என்ற நிறுவனம் 2 தங்கம், 5 வெள்ளி, 3 வெண்கலம் பெற்று சகலகலா வல்லவன் என்ற விருதை பெற்றது. அதே போல், ஹலோ எப்.எம். உள்பட பல்வேறு நிறுவனங்கள் விருதுகளை பெற்றன.

### கலை நிகழ்ச்சிகள்

முன்னதாக, கண்ணை கவரும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த விருதுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை 'தினத்தந்தி' செய்திருந்தது.